







## நாம் ஒற்றுமையாக இருந்து

# மாநில உரிமைகளை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சிகளை முறியடிப்போம்!

## திருவனந்தபுரத்தில் `மாத்ருபூமி' நாளிதழ் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!





திருவனந்தபுரம், பிப்.8-

**மாநில உரிமைகள் மற்றும் அடையாளத்தை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சிகளுக்கு எதிராக நாம் ஒற்றுமையாக நிற்கவேண்டும் என்று திருவனந்தபுரத்தில் `மாத்ருபூமி' நாளிதழின் விழா நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை ஆற்றினார்.**

**கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் `மாத்ருபூமி இன்டர்நேஷனல் பெஸ்டிவல்' நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-**

அனைவருக்கும் வணக்கம்.

எல்லாவருக்கும் நமஸ்காரம்.

கேரளத்தின் பெருமைமிக்க `மாத்ருபூமி' குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் கலந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். `மாத்ருபூமி' என்ற சொல் தமிழில் `தாய் நிலம்' என்றும், ஆங்கிலத்தில் `Motherland' என்றும் பொருள்படுகிறது. கேரளத்திற்கு வரும்போதெல்லாம், எனது வீட்டுக்கு வருவதுபோல் தனித்துவமான தொடர்பை உணர்கிறேன்.

### மாநில உரிமைகள்!

எனது அனைத்து மலையாள சகோதர, சகோதரிகளுக்கும் நீங்கள் காட்டிவரும் அளவற்ற அன்பிற்கும் உபசரிப்பிற்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன். இன்று நான் உங்கள் முன்னால் நிற்கிறேன், ஒரு பிரச்சினை பற்றி பேச, அது என்னை ஆழமாக பாதிக்கிறது...

நமது மக்களாட்சியின் அதிமுக்கிய கூறான - அரசியலமைப்பு நமக்கு தந்துள்ள வாக்குறுதியாக மாநில உரிமைகள், தற்போது சந்தித்துவரும் அச்சுறுத்தல்கள் குறித்துப்பேச உங்கள் முன் நிற்கிறேன்.

ஒன்றிய அரசு, மாநிலங்களின் அதிகாரங்களை கபளீகரம் செய்துவரும் இக்காலகட்டத்தில், இந்த தலைப்பில் பேச என்னை அழைத்த `மாத்ருபூமி' நிறுவனத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள்தான் இத்தாக்குதலுக்கு ஆளாகின்றன.

சமூகநீதி, மொழியுணர்வு மாநில சுயாட்சிக்கான போராட்டங்களின் விளைவாகத் தோன்றிய திராவிட இயக்கமானது, மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தொடர்ந்து களமாடி வருகிறது. எங்கள் தலைவர்கள் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் தமிழ்நாட்டின் தனி அடையாளத்தைத் தற்காக்க சோர்வின்றி போராடினார்கள்.

இன்று அந்தப் போராட்டம் எங்களது மாண்புமிகு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

### மாற்றாந்தாய் மனப்பான்மை!

அண்மையில் தாக்கல்செய்யப்பட்ட ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் இருந்தே தொடங்குவோம். தனது ஒன்றரை மணி நேர பேச்சில், தமிழ்நாட்டில் இருந்து வந்தவராக சொல்லிக் கொள்ளும் ஒன்றிய நிதியமைச்சர் ஒரு முறை கூட தமிழ்நாட்டின் பெயரை உச்சரிக்கவில்லை. தொடர்ந்து, இரண்டாவது ஆண்டாக பா.ஜ.க. தலைமையிலான அரசு, தனது பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்திருக்கிறது. தமிழ்நாடு மட்டுமல்ல, கேரளமும் ஒன்றிய பட்ஜெட்டில் காணப்படவில்லை. ஆனால், பீகாருக்கும் குஜராத்துக்கும் பெருந்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கேரளா போன்ற பா.ஜ.க. ஆளாத மாநிலங்கள் மீது, ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுள்ள மாற்றாந்தாய் மனப்பான்மையின் வெளிப்பாடு இது.

எனவே, தமிழ்நாட்டுக்கு போதிய நிதியை ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து, நாளை மறுநாள் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க இருக்கிறோம்.

### உங்களுக்கு யார் கொடுத்தது?

மாநில உரிமைகள் குறித்து பேசும்போதெல்லாம், அது நாட்டு நலனுக்கு எதிரானது என்று சிலர் குரலெழுப்பு கிறார்கள். அவர்களிடம் நாம் கேட்கிறோம் - இந்த நாட்டின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் உகந்தது எது என நிர்ணயிக்கும் சர்வாதிகாரத்தை, உங்களுக்கு யார் கொடுத்தது? உங்களை மட்டுமே தேச பாதுகாவலர்களாகவும், எங்களையெல்லாம் சீர்குலைப்பாளர்களாகவும் சித்தரிக்கும் `திருகு வேலை'யை நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாநில அரசுகளின் பங்கேற்பு இல்லாமல், ஒன்றிய அரசால் எந்தவொரு திட்டத்தையும் திறம்பட செயல்படுத்தமுடியாது என்பதை இந்நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசுதான் குடிமக்களின் வாழ்வில் ஒவ்வொரு அங்கத்திலும் ஆழமாகப் பிணைந்துள்ளது.

``இந்நாட்டு குடிகளின் சுக-துக்கங்களில் பங்கெடுப்பது, மாநில அரசுதானே அன்றி ஒன்றிய அரசு அல்ல" என்று எங்கள் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணா குறிப்பிடுவார்.

ஒரு குடிசை தீப்பற்றி எரிந்தால், பக்கத்துத் தெருவின் குடியிருப்பில் மூன்றாவது மாடியில் வசிப்பவருக்கான அக்கறைதான் ஒன்றிய அரசின் மனப்பாங்காக இருக்கிறது. அதாவது தொலைவாகவும், ஒட்டுணர்வின்றியும் இருக்கிறது. ஆனால், மாநில அரசின் நிலையோ அருகே தீப்பிடித்த குடிசைக்கு அருகே வசிக்கும் மற்ற குடிசைவாசிகளைப் போன்றது. நாம் அவர்களோடு வாழ்ந்து, அவர்களது அன்றாட போராட்டங்களை அவர்களோடு துணைநின்று எதிர் கொள்கிறோம்.

### மாநில சுயாட்சி தீர்மானம்!

1974-இல், சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், நாட்டிலேயே முதன்முறையாக மாநில சுயாட்சியை வலியுறுத்தி, மாநில சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்வதில் மிகுந்த பெருமையடைகிறேன். அன்றைக்கு அத்தீர்மானம், எங்கள் தலைவரும் அப்போதைய முதலமைச்சருமான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் தலைமையில் நிறைவேற்றப்பட்டது.

இன்றைக்கு நிறைய மாநில அரசுகள் தங்களுக்கான அதிகாரங்களைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதற்காக குரலெழுப்புவதை காணும்போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

### எதிர்காலம் பாழாகிறது!

இந்திய அரசியலமைப்பானது, அரசு அதிகாரம் செலுத்தக்கூடிய பொருண்மைகளை ஒன்றிய, மாநில, பொது பட்டியல்களாகப் பிரித்துள்ளது. ஆனாலும், மாநிலப் பட்டியலில் உள்ள கருப்பொருட்கள் மீது ஒன்றிய அரசு அதிகார ஆக்கிரமிப்பைச் செய்கிறது. அனைத்து அதிகாரத்தையும் தனது கைகளில் குவிக்க ஒன்றிய அரசு விரும்புவது ஏன்?

பாதுகாப்பு, வெளியுறவு, மாநில உறவுகள் மட்டுமே ஒன்றிய அரசு நிர்வகிக்க வேண்டியவை என எங்கள் தமிழ்நாட்டுத் தலைவர்கள் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஒன்றிய அரசு அளவுக்கதிகமான அதிகாரத்தைக் குவித்தபடியே, கூட்டாட்சிக் கட்டமைப்பைச் சீர்குலைத்து வருகிறது. பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வி வரை தேவையில்லாமல் தலையிட்டு, கோடிக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்க முனைகிறது.

தமிழ்நாடு அரசு புதிய கல்விக் கொள்கையை ஏற்காத காரணத்தால், ஒன்றிய அரசு திட்டங்களுக்கான நிதியை நிறுத்திவைத்திருக்கிறது. இது பள்ளிகளின் செயல்பாட்டைப் பாதிக்கும் அதே வேளையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நமது திராவிட மாடல் அரசு, மாநில அரசின் நிதியைக் கொண்டு அத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுவதை உறுதிசெய்கிறது.

`மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதே தி.மு.க.வின் அடிப்படை அரசியல் சித்தாந்தமாக இருக்கிறது. அதனால், மாநில அரசுகள் தங்கள் மக்களுக்குத் திறம்பட சேவையாற்ற, ஒன்றிய அரசு தன்னிடம் குவித்துள்ள அதிகாரங்களை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என கோருகிறோம்.

குறைந்த வளங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் இருந்தபோதிலும், மாநில அரசுகள் மக்கள் நலப்பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றன. குறிப்பாக, கல்வி, மருத்துவம் மற்றும் இதர சமூக மேம்பாட்டு குறியீடுகளில் தமிழ்நாடும் கேரளமும் குறிப்பிடத்தக்க சாதனைகளை செய்துள்ளன.

### தனிநபர் வருமானம்!

தென்மாநிலங்களில் வாழ்க்கைத் தரம், நாட்டின் பிற பகுதிகளைவிட உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் 3 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயாக உள்ள நிலையில், தேசிய தனிநபர் வருமானம் 1 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மட்டுமே. ஒன்றிய அரசின் எந்தச் சிறப்பு கவனிப்பும் இல்லாமல், இதை நாங்கள் சாதித்துள்ளோம். இருப்பினும், திறம்பட செயலாற்றும் மாநிலங்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு இடைஞ்சல்களையே ஏற்படுத்துகிறது.

தமிழ்நாடு தொடர்ந்து இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், ஒன்றிய அரசு உரிய நிவாரண நிதியை வழங்கத் தவறிவிட்டது. கடந்த ஆண்டு ஃபெங்கல் புயலால் கனமழை, பெரும்வெள்ளம் என தமிழ்நாடு பரவலான சேதத்தை சந்தித்தது.

பேரிடர் மீட்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு 6,675 கோடி ரூபாய் கோரியிருந்த நிலையில், 994 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இதே நிலைதான். இருந்தபோதிலும், தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது.

### வணிக நிறுவனங்கள் பாதிப்பு!

திரு நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்றதில் இருந்து, இந்தியா எந்த வகையிலும் முன்னேறவில்லை. மாநிலங்களுடன் எந்த ஆலோசனையும் செய்யாமல், அவர் எடுத்த `பணமதிப்பிழப்பு நடவடிக்கை' இந்தியப் பொருளாதாரத்தையே முடக்கிபோட்டதுடன், குடிமக்கள் ஒவ்வொருவரையும் பாதித்தது. இதேபோல், ஜி.எஸ்.டி. கவுன்சிலில் மாநிலங்களின் குரலைக் கருத்தில் கொள்ளாமல், அவர் அமல்படுத்திய வரிமுறை நாடு முழுவதும் உள்ள தொழில் மற்றும் வணிக நிறுவனங்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. ஒன்றிய பட்டியலின் மற்றொரு முக்கியமான கருப்பொருள் `மக்கள் தொகை கணக்கெடுப்பு'. நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள், ஜாதி அடிப்படையிலான மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு நடத்தவேண்டும் என்று கோரி வருகின்றன. ஆனால், இதுகுறித்து ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒன்றிய பட்டியலின் கீழ் உள்ளவற்றில், மோடி அரசு மோசமாகத் தோல்வியுற்ற பல விஷயங்களில் சிலவற்றை மட்டும் நான் இப்போது முன்னிலைப்படுத்தினேன்.

மாநில உரிமைகள் பறிக்கப்படுவதன் மிகவும் வெளிப்படையான எடுத்துக்காட்டுகளில் ஒன்று ஆளுநர் அலுவலகத்தைத் தவறாக பயன்படுத்துவதாகும். அரசியல் சாசனப்படி பொறுப்பேற்றிருக்கும் ஆளுநர், ஒன்றிய அரசின் ஏஜெண்டாக மாறிவிட்டார். தமிழ்நாடு போன்ற எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மாநிலத்திற்கும், ஒன்றிய அரசுக்கும் இடையே பாலமாக செயல்படாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் செயல்பாட்டிற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றனர்.

### மாண்பை சீர்குலைக்கும் ஆளுநர்!

தமிழ்நாட்டில், சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், முக்கிய முடிவுகளைத் தாமதப்படுத்தி, மக்களாட்சி மாண்பை சீர்குலைக்கும் ஆளுநர் இருக்கிறார். ஏற்கனவே பொது சுகாதாரத்தில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டில் ஏன் ஒன்றிய அரசு நீட் தேர்வை திணிக்கிறது? தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட `நீட் தேர்வு விலக்கு மசோதா'வுக்கு ஒப்புதல் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், ஆளுநர் அலுவலகம் எப்படி மாநில சுயாட்சியை குழிதோண்டிப் புதைக்கும் வகையில் செயல்படுகிறது என்பதை நினைவூட்டுகிறது.

ஆளுநர் அலுவலகம், ஒற்றுமையின் அடையாளமாக இருப்பதற்குப் பதிலாக, அரசியல் அத்துமீறலின் கருவியாக மாறியுள்ளது. தற்போது யு.ஜி.சி.யின் புதிய வரைவு வழிகாட்டுதல்கள் மூலம், மாநிலப் பல்கலைக்கழகங்களைக் கட்டுப்பாட்டில் எடுக்க, ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. இந்த வழிகாட்டுதல்கள், துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேடல் குழுவை நியமிக்க, ஆளுநர்களுக்கு அதிகாரம் அளித்து, மாநில அரசை வெறும் பார்வையாளராக சுருக்குகிறது. முக்கியதத்துவம் வாய்ந்த இந்தப் பதவிகளுக்கு கல்விப்புலம் சாராத நபர்களை நியமிக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

இவையெல்லாம் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்குள் ஊடுருவி, அவற்றைக் காவிமயமாக்கும் முயற்சியேயன்றி வேறில்லை. ஆனால். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, தமிழ்நாடு சட்டப் பேரவையில் யு.ஜி.சி. வரைவு வழிகாட்டுதல்களுக்கு எதிராக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். நமது மாண்புமிகு முதலமைச்சர், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில முதல்வர்களுக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து, கேரள சட்டப்பேரவையிலும் இதேபோன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்காக மாண்புமிகு கேரள முதல்வர் திரு பினராயி விஜயன் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், யு.ஜி.சி. வரைவு வழிகாட்டுதல்களுக்கு எதிராக, கர்நாடக அரசு நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தியுள்ளது.

### மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

இன்னும் முத்தாய்ப்பாக, புதுடெல்லியில் தி.மு.க. மாணவர் அணியினர் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். யு.ஜி.சி.யின் அநியாய வழிகாட்டுதல்களுக்கு எதிராக, தங்கள் உணர்வுகளை பதிவுசெய்ய இந்தியா கூட்டணியின் தலைவர்கள் மற்றும் எம்.பி.க்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கின்றனர். ஒன்றிய அரசின் `ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம் கூட்டாட்சியின் மீதான தாக்குதலாக இருக்கும். அரசியலமைப்பு சட்டரீதியாக இது நீடிக்க இயலாத திட்டம். ஒரு மாநில அரசு கூட்டணி மாற்றம் அல்லது நம்பிக்கை இல்லா தீர்மானம் காரணமாக பதவியிழந்தால், அடுத்த தேசிய தேர்தல் சுற்று வரும் வரை பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா? இது அரசியலமைப்பின் 174-ஆம் சட்டப்பிரிவைச் செல்லாக்காசாக்குவதுடன், அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்புகளுள் ஒன்றான கூட்டாட்சித் தத்துவத்தை மீறுகிறது.

அடுத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், மக்களவைத் தொகுதிகளை மறுசீரமைக்கப் போகும் ஒன்றிய அரசின் நடவடிக்கையால் தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகப் போகின்றன. இதுதான் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்திய மாநிலங்களுக்குக் கிடைக்கும் வெகுமதியா?

### தொகுதி மறுசீரமைப்பு!

அந்த வகையில் தொகுதி மறுசீரமைப்பு அமல்படுத்தப்பட்டால், தமிழ்நாடும் கேரளமும் நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள பிரதிநிதித்துவ பலத்தை இழக்க நேரிடும். நமது மாநிலங்களின் குரலைக் நெருக்கவேண்டும் என்பதுதான் இதன் பின்னுள்ள குறிக்கோள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் மாண்பைக் குறைக்க, ஆளுநர் அலுவலகம் வழியாக தாக்குதல் நடத்த வழிவகை செய்யும் ஓர் அமைப்பை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். எங்கள் மக்களுக்கு அதிகாரமளிக்கும் கருவியான கல்வியை எம்மக்களிமிடருந்து பிடுங்கி டெல்லியில் குவித்துவைக்கும் ஒரு அமைப்பை, நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம்.

### மாநிலங்களின் குரல்!

நமது உரிமைகள், சுயாட்சி மற்றும் அடையாளத்தை நீர்த்துப்போகச் செய்யும் எந்தவொரு முயற்சிக்கும் எதிராக நாம் ஒற்றுமையாக நிற்க வேண்டும். மாநிலங்களின் குரல் கேட்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

கூட்டாட்சி என்பது தமிழ்நாடு அல்லது கேரளத்தின் பிரச்சினை அல்ல; அது ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான பிரச்சினை. இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு நான் கூறும் செய்தி இதுவே. ஏதாவது ஒரு மாநிலத்தின் உரிமைகள் இன்று மீறப்பட நாம் அனுமதித்தால், நாளை உரிமைகள் பறிக்கப்படப்போவது உங்கள் மாநிலமாக இருக்கலாம். நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு-1, `இந்தியா எனப்படும் பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்' என்ற வார்த்தைகளுடன் தொடங்குகிறது என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் விருப்பப்படி இந்தியா எப்போதும் மாநிலங்களின் ஒன்றியமாக இருக்க வேண்டும்.

### மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம்!

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டும் என்ற எங்களது கோரிக்கையின் நோக்கம், ஒன்றிய அரசைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதல்ல. மாறாக, வலுவான மாநிலங்கள் இணைந்து, வலுவான ஒன்றிய அரசை உருவாக்கும், அதே நேரத்தில் பலவீனமான மாநிலங்கள் பலவீனமான தேசத்திற்கு வழிவகுக்கும் என்பதாலேயே. பாசிச சக்திகளின் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், மாநில உரிமைகளுக்காகவும், இந்தித் திணிப்புக்கு எதிராகவும் தி.மு.க. தொடர்ந்து குரல் எழுப்பும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மற்றும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில், இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். இதற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கிறோம். இது ஒரு நூற்றாண்டு கால மாநில உரிமைக்கான போராட்டம்; இதை நாங்கள் ஒருநாளும் கைவிட மாட்டோம்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்நாடு! வாழ்க இந்தியாவின் கூட்டாட்சி!

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

மாத்ருபூமி நிர்வாக இயக்குநர் எம்.வி.ஷ்ரேயாம்ஸ் குமார், நிர்வாக ஆசிரியர் பி.வி. சந்திரன், இணை நிர்வாக இயக்குநர் பி.வி. நிதிஷ், இயக்குநர்கள் மயூரா ஷ்ரேயாம்ஸ் குமார், தேவிகா ஷ்ரேயாம்ஸ் குமார், ஆசிரியர் மனோஜ் கே.தாஸ் மற்றும் கேரள மாநில கழக அமைப்பாளர் முருகேசன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.